# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - I)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது. ஆனால் அது முழுச் சுதந்திரமல்ல ஒரு டொமினியன் அந்தஸ்து கொண்ட நாடானது. அச் சமயம் 1946ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோல்பறி அரசியலமைப்பு நடைமுறையிலிருந்தது. அது 1972ம் ஆண்டு இலங்கையை ஒரு குடியரசாக்கும் வரையிலும் தொடர்ந்திருந்தது.

**சோல்பறி அரசியலமைப்பு**

இது ஆங்கில ஆட்சியின் காலமான 1946ம் ஆண்டு மே மாதம் 15ந் திகதி உருவாக்கப்பட்டது. இது ஏழு தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. 1947ல் மட்டும் நான்கு தடவை அதில் கடைசியாக செய்த திருத்தம் சுதந்திரம் கொடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைக் கொண்டது. இந்த சோல்பறி அரசியலமைப்பில் தற்போதுள்ள ஜனாதிபதி என்ற பதவியின் பெயர் இல்லாது ஆளுநர் நாயகம் ''கவர்னர் ஜெனரல்'' (Governor – General) எனும் பெயரிலேயே அமைந்திருந்தது. இங்கிலாந்து இராணியே தனது விருப்புப்படி இந்த நியமனத்தைச் செய்வார் என அதன் உறுப்புரை 4 (1) டில் கூறப்பட்டுள்ளது. ஆளுநர் நாயகம் நாட்டின் நிருவாகத் தலைவராக இருந்தாலும் பிரதம அமைச்சரும் கபினெற் அமைச்சர்களும் நிருவாகத்தை கொண்டு நடாத்தி தேவையான ஆவணத்தில் கையொப்பங்களுக்கு மாத்திரம் அவரின் பதவியும் முத்திரையும் முக்கியம் பெறுவதாக இருந்தது. அவ்வகையில் முதலாவது ஆளுநர் நாயகமாக நியமனம் பெற்றவர் சேர் ஹென்றி மொங்க் மேசன் மூரே என்பவர் - பெப்ரவரி 1948 – ஜூலை 1949: பின் ஹர்வால்ட் ராம்ஸ்போத்தம் ஜூலை 1949 – ஜூலை 1954 : அதன்பின் சேர் ஒலிவர் குணதிலக ஜூலை 1954 – மார்ச் 1962 : அதன்பின்னர் வில்லியம் கோபல்லாவ மார்ச் 1962 – மே 1972 வரை நியமனம் பெற்றிருந்தனர்.

இந்த அரசியலமைப்பில் உறுப்புரை **29 (2) மக்களின் சுதந்திரமான சமய வழிபாட்டை தடைசெய்யும் வகையில் அல்லது கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை இயற்ற முடியாது என கூறப்பட்டுள்ளது. மேலும் இனம் சம்பந்தமாக பாரபட்சம் எதுவும் காட்டமுடியாதென கூறப்பட்டுள்ளது. ஏனைய இனத்தவர்கள் அனுபவித்து வருவதை ஒரு இனத்தவர் அனுபவிப்பதிலிருந்து தவிர்க்கப்படவோ அல்லது தடைசெய்யப்படவோ அதேபோன்று ஏனைய இனத்தவர்கள் அனுபவித்து வருவதைவிட கூடுதலாக ஒரு இனத்தவருக்கு சிறப்புரிமை அல்லது அனுகூலம் கொடுப்பதாகவோ சட்டம் இயற்றமுடியாது** எனவும் கூறுகின்றது.

முதலாவது பாராளுமன்றம் இந்தச் அரசியலமைப்பின் கீழேயே அமைந்தது. அதற்கு முன்னர் சட்ட சபை (State Council) என்ற பெயருடைய சபை இருந்தது. பாராளுமன்றம் என்பது இங்கிலாந்து அதிமேற்றிராணியையும் இலங்கையில் தெரிவாகப்படும் செனற்

சபையையும் பிரதிநிதிகள் சபையையும் கொண்டதாகவிருக்கும் என உறுப்புரை 7 கூறுகிறது. முதலாவது மக்கள் பிரதிநிதிகள் சபை 95 உறுப்பினர்களையும் 06 நியமன உறுப்பினர்களையும் கொண்டதாகவிருந்தது.

**ஐக்கிய தேசியக் கட்சியும் இடதுசாரிகளும்**

1947ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கூடிய ஆசனங்களைப் (42) பெற்று தமிழ் காங்கிரசின் (07) பேர்களின் கூட்டினால் அரசை அமைத்தது. ஜி.ஜி. பொன்னம்பலமும் வேறு சில காங்கிரஸ்காரர்களும் அமைச்சர் அரை அமைச்சர்கள் ஆகினார்கள். பிரதான எதிர்க்கட்சியாக இடதுசாரி லங்கா சமசமாஜக் கட்சி டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் வலுப்பெற்றிருந்தது. இடதுசாரிக் கட்சிகள் பிளவடைந்திருந்த காரணத்தாலேயே முதலாளித்துவக் கட்சியாக அக்காலத்தில் கருதப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி கூடிய ஆசனங்களைக் கைப்பற்ற வாய்ப்பாக அமைந்திருந்தது எனலாம்.

**இலங்கை இந்தியன் காங்கிரஸ்**

1947 பொதுத் தேர்தலில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்ற பெயரில் மலைநாட்டின் பிரதிநிதிகளாக 06 பேர்கள் தெரிவாகியிருந்தார்கள். அவர்களின் பெயர்களாவது: பதுளை - எஸ்.எம். சுப்பையா: மஸ்கெலியா -ஜி.ஆர். மோத்தா: நாவலபிட்டி - கே. இராஜலிங்கம்: கொட்டகல - கே. குமாரவேலு: தலவாகெல்லை - சி.வி. வேலுப்பிள்ளை: அலுத் நுவர – டி. ராமானுஜம்: இவர்கள் யாவரும் தோட்டத் தொழிலாளிகளின் பிரதிநிதிகள் என்ற வகையில் இடதுசாரி கொள்கைகளை கொண்டவர்கள். மேலும் இடதுசாரிகளான போல்ஸ்விக் கட்சி (05) கமியூனிச கட்சி (03) தொழிற் கட்சி (01) சுயேட்சைகளாக வெற்றிபெற்ற 21 பேர்களில் கூடிய பாங்கானவர்கள் இடதுசாரிக் கொள்கையை கொண்டவர்களாக இருந்தார்கள். அப்போது தமிழ் காங்கிரஸ் உதவியிருந்தால் இடதுசாரி கட்சிகளின் ஆட்சியொன்று அமைய வாய்ப்பிருந்தது. இந்த சமபலத் தன்மை ஒரு பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட அடித்தளமாக அமைந்தது. மலையகத் தொழிலாளர்கள் சிறுபான்மையினராக பரந்துபட்டு வாழ்ந்த தொகுதிகளில் இடதுசாரிகளே வெற்றி பெற்றிருந்தது ஐக்கிய தேசியக் கட்சியினரை உறுத்தியது. அவர்கள் ஆட்சி அமைத்த கையோடு இரண்டு சட்டங்களை (1948ம் ஆண்டைய இலங்கை பிரஜாவுரிமை சட்டம் : 1949ம் ஆண்டைய இந்தியன் பாகிஸ்தானி வதிவிடவுரிமைச் சட்டம்) நிறைவேற்றி மலையக மக்களின் வாக்குரிமையை இல்லாதாக்கிவிட்டார்கள்.

ஜி.ஜி.பொன்னம்பலம் அமைச்சராகியதை எதிர்த்தும் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதற்கு அரசுடனான அவரின் கூட்டே காரணமென்றும் தமிழ் காங்கிரஸோடு அன்றிருந்த (1949) எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சி. வன்னியசிங்கம் டாக்டர். ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோர் கட்சியினின்றும் விலகி அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை நான்கு அம்சக் கோரிக்கையோடு ஆரம்பித்தார்கள். இடதுசாரிகளின் பலம் குறையவும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பிளவடையவும் சமஸ்டிக் கோரிக்கை எழவும் அந்தச் சமபலமே காரணமாகியது எனக்கூறலாம்.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எழுச்சி**

முதலாவது பாராளுமன்றத்தல் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா 1951ம் ஆண்டு அதிலிருந்து விலகி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியியை ஆரம்பித்து 24 மணித்தியாளங்களில் சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றுவேன் என சபதமிட்டு 1956ம் ஆண்டு பொதுத் தேர்தவில் அதைச் சாதித்தும் காட்டினார்.

**சிங்களம் மட்டும் சட்டம்**

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் அரச ஊழியர்கள் சிங்களம் படித்து சித்தி பெற்றாலே ஆண்டாண்டு வேதன அதிகரிப்பு கிடைக்குமென்ற சுற்றறிக்கை தமிழ் ஊழியர்களை கடுமையாகப் பாதித்தது. இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய அன்று (1956 ஜூன் 05ந் திகதி) தமிழரசுக் கட்சியினர் பிரதிநிதிகள் உட்பட முதன்முறையாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைக் குழப்புவதற்கு காடையர்கள் ஏவப்பட்டு பிரதிநிதிகள் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சட்டத்தை அடிப்படையாக கொண்டே அதைத் தன் மேல் திணிப்பதாகவும் சிங்களப்பாஷை தேர்வில் சித்தி பெறாவிட்டால் சம்பள உயர்வு தரப்படமாட்டாது எனவும் சட்டம் உள்ளது என்றும் அரசாங்க லிகிதர் சேவையிலிருந்த செல்லையா கோடீஸ்வரன் என்பவர் 1962ல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இது சோல்பறி அரசியலமைப்பு உறுப்புரை 29 (2)இன் ஏற்பாடுகளுக்கு முரணகவுள்ளது எனவும் வழக்கிற்கு ஆதாரமாக முன்வைத்தார். வழக்கில் அவர் சார்பாக மாவட்ட நீதிபதியால் தீர்க்கப்பட்டது. கொடுத்த தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்தார். அங்கு மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு ஏற்கப்படாது தள்ளுபடி செய்யப்பட்டது. இதை எதிர்த்து வழக்காளி தரப்பில் லண்டனில் பிரபுக்கள் சபைக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் தேவையில்லாதவற்றை அலசியுள்ளதென்றும் அதை மீள்விசாரணை செய்ய உயர் நீதிமன்றுக்கு பிரபுக்கள் சபை அனுப்பியது. அப்போது (1970) ஸ்ரீமாவோ தலைமையில் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் 1972ம் ஆண்டு அவசர அவசரமாக அரசியலமைப்பு நிர்ணய சபையை ஏற்படுத்தி இலங்கை நாட்டை ஒரு குடியரசு எனப் பிரகடனப்படுத்தியது. அதனால் லண்டணிலுள்ள பிரபுக்கள் சபைக்கு இங்குள்ள வழக்குகளை விசாரிக்க அதிகாரமில்லாது போயிற்று.

சிங்களம் மட்டும் சட்டத்தின் பிரதிபலிப்பாக 1958ல் வாகனங்களின் இலக்கத்தகடுகளில் சிங்கள ஸ்ரீ பதித்து இலக்கங்கள் இடப்பட அரசு பணித்தது. இதை வன்மையாக கண்டித்த தமிழரசுக் கட்சி அதற்கெதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்திலே கச்சேரிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகம் நாளடைவில் வவுனியா மன்னார் திருகோணமலை மட்டக்களப்பு என விஸ்தரிக்கப்பட்டது. சில மாதங்களாக கச்சேரி நிர்வாகம் முடக்கப்பட்டிருந்தது. வடகிழக்கிலுள்ள பெயர்பலகைகளில் சிங்கள எழுத்துக்கள் அழிக்கப்பட்டன. அதே போன்று சிங்களப் பகுதிகளில் பெயர்பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்பட்டன. 1964லில் இந்தோ-சிலோன் என்னும் ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டு அதன் பயனாக ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரம் இந்திய வம்சாவழியினர் இந்தியாவுக்கு பலவந்தமாக அனுப்பப்பட இருந்தார்கள். ஆனால் 280,000 பேர்கள் மட்டும் அனுப்பியதோடு ஒப்பந்தம் காலாவதியானது.

**1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்பு**

இரண்டாவது அரசியலமைப்பு 1972ம் ஆண்டு ஸ்ரீமாவோவின் சுதந்திரக் கட்சி ஆட்சியில் இலங்கையை குடியரசாக ஆக்கியபோது உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டமாகும். இந்தச் சட்டத்தின் உறுப்புரை 25 **இன்படி பிரதம மந்திரியால் பெயர் குறித்து கூறப்பட்டவர் ஜனாதிபதியாக நியமனம் பெறுவார்** என்றுள்ளது. **இவரே அரசின் தலைவராவார் எனவும் ஆட்சித் துறைத் தலைவரும் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவருமாவார்** என 19ம் 20ம் உறுப்புரைகள் கூறுகின்றது. **இவர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீது செயற்படுவாரென** உறுப்புரை 27 (1) கூறுகின்றது. **அதன்படி பிரதம அமைச்சரையும் அமைச்சரவை அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிப்பாரெனவும் மேலும் பலவிதமான நியமனங்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீதே நியமிப்பாரெனவும்** கூறுகின்றது. இங்கே அவதானிக்கப்படுவது என்னவெனில் சனாதிபதி என்ற பெயர் அரசத் தலைவருக்கு பாவிக்கப்பட்ட முதற்சந்தர்ப்பம் இது என்பதும் வெறுமனே கையெழுத்திடும் பதவி என்றிராது நியமனங்களை பிரதமரின் ஆலோசனையின்மீது செய்யும் ஒரு அதிபராகவும் முன்னேற்றமடைந்த பதவியாக விளங்கியது. இந்த நிறைவேற்று அதிகாரமற்ற ஜனாதிபதி பதவிக்கு 1972ம். ஆண்டு வில்லியம் கோபல்லாவே நியமிக்கப்பட்டிருந்தார்.

( இதன் தொடர்ச்சி அடுத்த வாரம் தொடரும்)